Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 27 | (13-10-1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 238

## சிறிலங்கா குடிமக்களே அதிகம் குடிப்பவர்கள்

உலகிலேயே அதிகமாகக் குடிப்பவர்கள் சிறிலங்காவின் குடிமக்கள்தான் என்பது தற்போது தெரியவந்துள்ளது. தனிநபர் ரீதியாக கணக்கிலெடுத்துப் பார்க்கும் போது அதிகளவில் குடிவகைகளை நுகர்பவர்கள் சிறிலங்காவினர் என்றும் அரசுக்கு இத்துறைரீதியான வருமானம் வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு ஏழு சதவிகிதம் என்று மேலும் தெரியவருகிறது. லண்டன், நியூயோர்க், டோக்கியோ, ஹொங்கொங் போன்ற பெரும் நகரங்களில் கிளைகளைக் கொண்டுள்ள ஸ்மித் நியூ கோர்ட் என்னும் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

# 8000 சிப்பாய்கள் படையிலிருந்து ஓட்டம்

# புதிதாக சேர சிங்கள இளைஞர் பின்னடிப்பு

## ஓடியோரால் குற்றங்கள் அதிகரிப்பு அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடி

[கொழும்பு]

சிறிலங்கா ஆயுதப்படையில் இருந்து இதுவரையில் 8000 க்கு மேற்பட்டோர் ஓடியுள்ளதாகத் தெரியவருகிறது. புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சித் தப்பி ஓடியுள்ள இவர்கள் தென்னிலங்கையில் தனியாகவும் குழுக்களாகச் சேர்ந்தும் பெரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சிறிலங்கா பொலிஸ்வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளை படையினருக்கு ஆட் சேர்க்கும் அரசாங்கத்தின் முயற்சி தோல்விகண்டுள்ளதாகவும், இராணுவத்தில் சேர்ந்து கொள்ள சிங்கள இளைஞர்கள் பின்னடிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சுமார் 8000 பேர் நாசகாரச் சக்திகள் அல்லது குற்றவாளிகளுடன் இணைந்து களவுகளிலும் மற்றும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முழுக்கவனத்துடன் செயற்பட்டு இவர்களைக் கைது செய்யும்படி பொலிஸ் நிலையங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில்மஸ்கெலியாவில் நடந்த களவு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட மூவர்களும் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்கள் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. இவர்கள் மூவரும் இராணுவச் சிப்பாய்கள் போல் நவீன ஆயுதங்களுடன் கிராமங்களில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் ஒப்பந்த அடிப்படையில் பயங்கர குற்றவாளிகளுடன் இணைந்து தொழிற்படுவதாகவும், இன்னும் சிலர் ஜே. வி. பி. அல்லது அரச விரோத சக்திகளுடன் இணைந்திருப்பதாகவும்பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த மாத இறுதியிலும் இம்மாத ஆரம்பத்திலும் இராணுவத்திற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைப் படகுகள் மீனவர் மீது தாக்குதல்

### -ஒரு படகைக் காணவில்லை

(நமது நிருபர்)

பருத்தித்துறை கடற் பகுதியில் ரோந்துச் சேவையில் ஈடுபட்ட கடற்படையினர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை ஏழு மணியளவில் ... டிருந்த கடற்படையினர் கரைப்பகுதியை நோக்கியும், மீனவர்களை நோக்கியும்மேற்கொண்ட அகோரதாக்குதலின்போது சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இதேவேளை மீன்பிடிக்கச் சென்றிருந்த படகுகளில்

## தொழிலாளர் சம்பளப்பணத்தை கொள்ளையிட முயன்ற இரண்டு இராணுவம் கைது

### சிறிலங்கா ஆயுதப்படையிலிருந்து

## தளபதிகள் சிலர் பதவிவிலகலாம் அதிகார மாற்றத்தின் எதிரொலி

(லண்டன்)

இராணுவ உயர் அதிகார பீடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார மாற்றத்தின் காரணமாக படை உயர் மட்டத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் படை உயர் அதிகாரிகள் சிலர் பதவி விலகக்கூடும் எனவும் தெரியவருகிறது.

இது குறித்து முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்சல் ஹரி குணதிலக பி. பி. சிக்கு கருத்து தெரிவிக்கையில், இதுவரை காலமும் முப்படைகளின் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் கொண்ட அமைப்பின் தலைவராக இருந்த எயர் மார்சல் கிளான்சி பர்னான்டோ பதவி விலகக் கூடும் எனவும் தெரிவித்தார்.

கூட்டுப்படை தலைமையகத்திலும் சிறந்த முறையில் தம்மால் செயலாற்ற முடியும் என தெரிவித்துப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட முப்படைத் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் ... பார்த்த வெற்றியைப் பெறாமையே இவ் அதிகார மாற்றத்திற்கு காரணமாகஇருக்கலாம் என தெரிவித்தார்.

கடந்த ஆறுமாத காலத்தில் புலிகள் பெரும் வெற்றிகளை சந்தித்துள்ளனர் என பி. பி. சி. தெரிவித்தது

## பிரிட்டிஷ் துணை அமைச்சர் கொழும்பு விஜயம்

வெளிவிவகாரத் திணைக்களத்தில் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான மாரிக் லென்னாக்ஸ் போயிட் இவ் வாரம் கொழும்பு வரவுள்ளார்.

டேவிட் கிளாஸ்ரோன் விவ (4 ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தரமாக வசிக்க விரும்பினாலும்

## மூன்று மாதங்களுக்குமட்டும் வவுனியாவில்தங்க அனுமதி

(வவுனியா)

வவுனியா நகருக்குள் நுழைவோர் மீதும் அங்கு நிரந்தரமாக தங்கியிருப்போர் மீதும் பொலிசார் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

பொலிசாரின் அனுமதி ... நகரப்பகுதி வீடுகள், கடைகள், கோவில்கள், பாடசாலைகள் போன்றவற்றிலும் நடமாடுவோரை அல்லது தங்கியிருப்போரை பொலிசார் உடனடியாக கைது செய்கின்றனர்.

வடபகுதியிலிருந்துவவுனியா நகரப் பகுதி நோக்கிச் செல்

ஞர்கள் பின்னடிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சுமார் 8000 பேர் நாசகாரச் சக்திகள் அல்லது குற்றவாளிகளுடன் இணைந்து களவுகளிலும் மற்றும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முழுக்கவனத்துடன் செயற்பட்டு இவர்களைக் கைது செய்யும்படி பொலிஸ் நிலையங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில்மஸ்கெலியாவில் நடந்த களவு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட மூவர்களும் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்கள் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. இவர்கள் மூவரும் இராணுவச் சிப்பாய்கள் போல் நவீன ஆயுதங்களுடன் கிராமங்களில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் ஒப்பந்த அடிப்படையில் பயங்கர குற்றவாளிகளுடன் இணைந்து தொழிற்படுவதாகவும், இன்னும் சிலர் ஜே. வி. பி. அல்லது அரச விரோத சக்திகளுடன் இணைந்திருப்பதாகவும்பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த மாத இறுதியிலும் இம்மாத ஆரம்பத்திலும் இராணுவத்திற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் சம்பளப்பணத்தை

# கொள்ளையிட முயன்ற இரண்டு இராணுவம் கைது

(கண்டி)

கண்டி பிரதேசத்தில் உள்ள தோட்டமொன்றின் சம்பளப் பணத்தை கொள்ளையிட முயற்சித்த இரு சிறிலங்கா இராணுவத்தினர் உட்பட ஐவரை மத்திய மாகாண குற்றத்தடுப்பு விசேட பொலிஸ் பிரிவு கைது செய்துள்ளது.

தெல்தெனிய பகுதியிலுள்ள ரங்கன என்ற பிரதேச தோட்டமொன்றின் சம்பளப் பணத்தைக் கொள்ளையிட கடந்த வியாழனன்று இந்த ஐவரும் சென்றுகொண்டிருக்கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைப் படகுகள் மீனவர் மீது தாக்குதல்

## -ஒரு படகைக் காணவில்லை

(நமது நிருபர்)

பருத்தித்துறை கடற் பகுதியில் ரோந்துச் சேவையில் ஈடுபட்ட கடற்படையினர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை ஏழு மணியளவில் கடலில் ரோந்து சென்ற கடற்படையினர் சில மணிநேரம் தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகத்தையும், இடையிடையே பீரங்கிச் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நடுக்கடலில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் கரைப்பகுதியை நோக்கியும், மீனவர்களை நோக்கியும்மேற்கொண்ட அகோரதாக்குதலின்போது சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இதேவேளை மீன்பிடிக்கச் சென்றிருந்த படகுகளில் ஒன்றைக் காணவில்லை என்றும்,

மற்றொரு படகு ஆட்கள் இல்லாமல் கரை ஒதுங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப் படகில்சென்றவர்களை கடற்படையினர் கைதுசெய்து கொண்டு சென்றிருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக இக் கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் மீனவர்களைத் துன்புறுத்தியும் சுட்டும், கைது செய்தும் வருவதால் மீனவர்கள் மத்தியில் பீதி நிலை ஏற்பட்டு வருகிறது. [82], [21]

# ராணுவ தலைமையை உலுப்பிய புலிகளின் வெற்றிகர தாக்குதல்

கட்டைக்காடு இழப்பே இராணுவக் கட்டுப்பாட்டு அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது

புலிகள் ஒக்டோபர் இரண்டாம்திகதி வெற்றிலைக்கேணி அருகேயுள்ள கட்டைக்காடு இராணுவ முகாம் மீது நடத்திய தாக்குதலினால் இராணுவ தரப்பில் உண்டான பாரிய இழப்புகளும், பின்னடைவுமே இராணுவக் கட்டுப்பாட்டு அமைப்பில் செய்யப்பட்ட மாற்றத்துக்கான பிரதான உடனடிக் காரணம் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றனஎன்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன

படையைவிட்டு இராணுவத்தினர் பெருமளவில் ஓடுவதும் மற்றொரு காரணமாகும் என்று அரசு தரப்பை மேற்கோள்காட்டிக் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினர் பெருமளவுஆயுதங்களை பறிகொடுத்திருப்பது பெரும் ஆபத்தையே விளைவிக்க போவதாக இராணுவ நிபுணர்கள்அச்சம் தெரிவித்துள்ளனர்.

பெருந்தொகையான ஆயுதங்களை பறிகொடுத்த சம்பவமானது பாதுகாப்பு படையினருக்கு அழிக்கமுடியாத அவப்பெயரை ஏற்படுத்தி இருப்பதுடன் உயிராபத்தையும் எதிர்நோக்கவேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளி இருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மீட்புநிதி சேகரிப்பு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு நாளை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெறும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கப்பல் போக்குவரத்து காரணமாக

# முற்பணம் செலுத்தியபோதும் உணவுப் பொருள்வர தாமதம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திற்கான கப்பல் போக்கு வரத்தை சீராக்குவதற்கும் மேலதிக அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கும் யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருக்கோணமலையில் இருந்து குமாரிகப்பல் மூலம் 3200 மெற்றிக் தொன் மா எடுத்து வருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. நேற்று மாலை 4.30 மணியளவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய வானொலிக் கருவி மூலம் மேற்படி அவசர செய்தியை யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு பத்மநாதன் அனுப்பி வைத்தார்.

அதேவேளை அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைப்பதற்கு முற்பணம் செலுத்த வேண்டும் என்ற அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் நிபந்தனையை ஏற்று முற்பணம் செலுத்துவதற்கு ஏற்கனவே யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. சுமார் 36 மில்லியன் ரூபாவை யாழ்- செயலகம் இவ்வாறு வழங்கியிருக்கிறது. எனினும் மேற்படி முயற்சி கப்பல் போக்கு வரத்து காரணமாக தாமதமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# இன்று தபால்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட யாழ். மாவட்டத்திற்கான வெளியூர்த் தபால்கள் இன்று விநியோகிக்கப்படும்.

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பலில் இருந்து சுமார் 547 தபால் பொதிகள் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன இத்தபால்கள் இரவோடிரவாகதரம்பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகம் ஆரம்பமாகும் என்று தபால் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

பதவி விலகக்கூடும் எனவும் தெரியவருகிறது.

இது குறித்து முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்சல் ஹரி குணதிலக பி. பி. சிக்கு கருத்து தெரிவிக்கையில், இது வரை காலமும் முப்படைகளின் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் கொண்ட அமைப்பின் தலைவராக இருந்த எயர் மார்சல் கிளான்சி பர்னான்டோ பதவி விலகக் கூடும் எனவும் தெரிவித்தார்.

கூட்டுப்படை தலைமையகத்திலும் சிறந்த முறையில் தம்மால் செயலாற்ற முடியும் என தெரிவித்துப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட முப்படைத் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் கொண்ட அமைப்பு எதிர்

# கொழும்பு விஜயம்

வெளிவிவகாரத் திணைக்களத்தில் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான மார்க் லென்னாக்ஸ் போயிட் இவ் வாரம் கொழும்பு வரவுள்ளார்.

டேவிட் கிளாஸ்ரோன் விவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

நிரந்தரமாக வசிக்க விரும்பினாலும்

# மூன்று மாதங்களுக்குமட்டும் வவுனியாவில்தங்க அனுமதி

(வவுனியா)

வவுனியா நகருக்குள் நுழைவோர் மீதும் அங்கு நிரந்தரமாக தங்கியிருப்போர் மீதும் பொலிசார் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

பொலிசாரின் அனுமதி அட்டை இல்லாமல் நகரிலும் நகரப்பகுதி வீடுகள், கடைகள், கோவில்கள், பாடசாலைகள் போன்றவற்றிலும் நடமாடுவோரை அல்லது தங்கியிருப்போரை பொலிசார் உடனடியாக கைது செய்கின்றனர்.

வடபகுதியிலிருந்துவவுனியா நகரப் பகுதி நோக்கிச் செல்வோருக்கு ஒரு நாள் மட்டும் தங்குவதற்குரிய 'பாஸ்' வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட நபர் தங்கும் நாள் நீடிக்க வேண்டும் என்றால் மீண்டும் பொலிசாருடன் தொடர்பு கொண்டு 'பாஸை' புதுப்பிக்க வேண்டும்.

நகரப் பகுதி வீடுகளில் நிரந்தரமாக தங்கியிருப்போருக்கு மூன்று மாதங்களுக்குரிய 'பாஸ்' வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மேலதிக நாட்களுக்கு 'பாஸ்' பெற வேண்டும.

வடபகுதியிலிருந்து தென் பகுதி நோக்கிச் செல்பவர்கள் தென்பகுதியில் தங்கும் முகவரியை வழங்கி பொலிசாரிடமிருந்து 'பாஸ்' பெற வேண்டும்.

விசாரணையின் பின்பே அனுமதி அட்டைகள் வழங்கப்படுகிறது. தினமும் பலர் சந்தேகத்தில் கைது செய்யப்படுவதும் முண்டு.

யாழ். பல்கலைக்கழகம்

# புதிய கல்வியாண்டிற்கு 902 மாணவர் அனுமதி

யாழ் பல்கலைக்கழகத்தின் 91-92 புதிய கல்வி ஆண்டுக்கு 902 மாணவர்கள் அனுமதி பெற்றிருக்கின்றனர்.

இம் மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு 105 மாணவர்களும், விவசாய பீடத்துக்கு 40 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 93 மாணவர்களும், கலைப் பீடத்துக்கு 280 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்திற்கு 182 மாணவர்களும், முகாமைத்துவத்திற்கு 87 மாணவர்களும், வர்த்தகத்திற்கு 115 மாணவர்களுமாக மொத்தம் 902 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது

அனுமதி பெற்ற மாணவர்களது பெயர்ப்பட்டியல் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ளது.

மேற்படி அனுமதிகள் குறித்த மேன்முறையீடுகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தனி மாகாணசபைகளும் கூட்டுப் பிராந்திய சபையும்

## -தெரிவுக்குழு தலைவரின் திட்டம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான ஆலோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்கா முன்வைத்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

இதே நேரம் இந்த ஆலோசனைகளை தெரிவுக்குழுவின் ஆவணமாகச் சமர்ப்பித்தால் அவற்றைப் பரிசீலிக்கத் தயார் என்று தமிழ்க் குழுக்கள் கருத்துத் தெரிவித்துள்ளதுடன், இந்த ஆலோசனைகளைத் தாங்கள் கொள்கையளவில் வரவேற்பதாகவும் அவை தெரிவித்துள்ளன'

புதிய யோசனையின்படி வடக்கு, கிழக்கு இரண்டு தனித்தனி மாகாண சபைகளாக இருக்கும். அதேவேளையில் இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவான ஒரு பிராந்திய சட்டசபை அமையும். இந்த சட்டசபை சட்டங்களை இயற்றி அமுல்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும். இரண்டு மாகாண சபைகளும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும். இரு சபைகளும் ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவையைக் கொண்டிருக்கும்.

இந்த யோசனை தொடர்பான பேச்சுவார்த்தை கடந்த புதன்கிழமை பாராளுமன்ற கட்டடத்தில் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா தலைமையில் நடைபெற்றது இதில் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரம

(4 ஆம் பக்கம் பார்க்க)

வனம் ஒரு நாட்டின் சுமையல்ல

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவா ச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### துரித மீட்டற்பயிற்சி

துரித மீட்டற்பயிற்சி (ஆண்டு 5 புலமைப் பரிசில் வெளிவந்து விட்டது) புதிய கல்வி நிலையத்தால் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சி (15 வினாத்தாள்கள் விடைகளுடன்) ஆண்டு 6 அநுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3452)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582,Stanley Road Jaffna. (சி/5169)

### தவறி விட்டது

நீல கைப்பை ஒன்று மிகவும் தேவையான பொருட்களுடனும் இரு அடையாளஅட்டையுடனும் நல்லூர் கோவிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மணியம் வர்த்தக நிலையம், உரும்பராய் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3457)


## 'இறாஸ் கோப்பேர்ஸ்' முதலாமிடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக் கழகத்தால் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 3-10-92 முதல் 10-10-92 வரை 14 கழகங்களுக்கிடை...

# இரு பெரும் சிங்களக் கட்சிகளும் தமிழருக்குத் துரோகமிழைத்தன

(மாத்தறை)

"தென்கிழக்காசியாவின்முதலாவது சிறந்த நூல் நிலையம் யாழ்ப்பாண நூல் நிலையம். அங்கு 95,000 நூல்கள் இருந்தன. அதே போன்று அதன் பக்கத்திலே சிறிய நூல் நிலையம் ஒன்றும் இருந்தது. கொழும்பிலிருந்து சென்ற காடையர்கள் அதனை அநியாயமாக தீ வைத்து எரித்தனர். கடைகளுக்கும் தீ வைத்தனர். வீடுகளை தகர்த்து அட்டகாசம் செய்தனர். இன்றைய பிரச்சினைகளை தோற்றுவிப்பதில் இவையும் முக்கிய காரணங்களாகும்."

இவ்வாறு சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஓஸி அபயகுணசேகரா மாத்தறையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்கள் சந்தர்ப்பவாதிகளும் அல்லர், இனவாதிகளும் அல்லர். பிரதான அரசியல் கட்சிகளான ஐ.தே.க. யும் சுதந்திரக் கட்சியுமே பதவி ஆசையால் இனங்களுக்கிடையே வகுப்புவாதத்தை வளர்த்தன. இடதுசாரிகள் சரியான நிலைப்பாட்டில் இருந்திருந்தால் இனவாதம் என்ற பேச்சுக்கே இடம் இருந்திருக்காது. ஆட்சி பீடம்ஏறும் நப்பாசைக்காக இரு பெரும் கட்சிகளும் சிறுபான்மையினருக்கு துரோகத்தையே இழைத்து விட்டன.

வடபகுதி தலைவர்களாக இருந்த செல்வநாயகம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், பொன்னம்பலம் உட்பட பல தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க பாடுபடுவதாக காட்டிக் கொண்ட போதிலும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த பின் கொழும்பு கறுவாக்காட்டில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து கும்மாளம் அடித்தனர் இவற்றை உணர்ந்த இளைஞர்கள் மெல்ல மெல்ல புரட்சிகர வழியில் இறங்கத் தலைப்பட்டனர் அது விசுவரூபம் எடுத்து இன்று தீர்க்க முடியாத பிரச்சினையாகிவிட்டது.

தமிழ் மொழிக்கு உரிய இடத்தை அளிப்பதற்கான டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து சிறிமா விகாரமாதேவி பூங்காவில் ஊர்வலம் நடத்தியதையும், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே ஆர். கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டதையும் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை என்றும் அவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டக் கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 14-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10,00 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கழகத்தலைவர் திரு எஸ் வி மகேசவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

கழக ஆசிரியர்களின் முக்கிய விடயங்கள் பல இங்கு ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

★ ★ ★

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் 9, 10, 11, ஆம் ஆண்டு வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, சைவசமயம், வர்த்தகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வட்டு இந்துக்கல்லூரியிலும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் (மருதனார் மடம்) சேவைக்கால கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது.

தினமும் காலை 8-30 மணி தொடக்கம் 4-30 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறும் எனவும். இதில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் வி. மகேசவேல் தெரிவித்துள்ளார். (42)

## பயிற்சித் திட்டம்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இடம் பெயர்ந்த தீவகப் பெண்களுக்காக சுயவேலைவாய்ப்பு அளிப்பதனை நோக்கமாகக் கொண்ட பன்னவேலைப் பயிற்சித் திட்டமும், தும்பை அடிப்படையாகக் கொண்ட செயல்த்திட்டமும் இன்று செவ்வாய்க் கிழமை பி. ப. 3. 30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள வேலணைப. நோ. கூ. சங்க மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

### மலையகத்தில் தனியான

# இடதுசாரிக் கட்சியொன்றை அமைக்க முயற்சி

(கண்டி)

மலையக தொழிற் சங்கங்கள் சில ஒன்றிணைந்து மலையகத்திற்கென இடதுசாரிக் கட்சியொன்றினை உருவாக்கும் முயற்சி இப்போது இழுபறி நிலையில் உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடதுசாரிக் கட்சி உருவாக்கும் ஆரம்ப ஏற்பாடுகள் மலையகத்தைச் சேர்ந்த ஒரு மூத்த இடதுசாரி தொழிற்சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் புதிய கட்சி ஆரம்பிப்பதில் இழுபறி நிகழ்வதாகவும் தெரிகின்றது பிரச்சினைக்குரியவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புதிய கட்சி ஆரம்பிக்கப்படுவது நிச்சயம் என்றும் அவ்வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இதே வேளையில் இன்னொரு இடதுசாரித் தலைவர் இடதுசாரி கூட்டமைப்பொன்றினை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதாகவும் தெரிகின்றது.

இந்த முயற்சிகள் அனைத்துமே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதை நோக்காகக் கொண்டே நடைபெறுகின்றன என்று தெரிகிறது.


## பதவி வெற்றிடங்கள்

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

1] மிருக வைத்தியர்

2] கால்நடை அபிவிருத்தி தொழில் நுட்பவியலாளர்

மேற்படி பதவிகளுக்கான தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்கள் 24-10-92ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் - 172
மே/பா ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(சி-5215)


### அற்ப காரணங்களுக்காக

# ஆயிரக்கணக்கான இளைஞர் அரசினால் தடுத்து வைப்பு

## அவசரகாலச் சட்டம் உதவுவதாகக் குற்றச் சாட்டு

சிறிலங்காவில் இன்று பல்லாயிரம் இளைஞர்கள் எவ்வித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவர்கள் கடுமையான பயங்கரவாதிகள் என அரசு தெரிவிக்கின்றது. இருப்பினும் உண்மையில் தீவிரவாதிகள் பற்றிய தகவல்களைப் பொலிசாருக்குத் தெரிவிக்கத் தவறினார்கள் என்பதே இவர்களுள் பெரும்பாலானோருக்கு எதிராக உள்ளகுற்றச்சாட்டாகும். இவ்வாறு சிறிலங்கா மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த கல்யாணந்ததிரணகம தெரிவித்தார்.

அப்படி தீவிரவாதத்துடன் சம்பந்தப்பட்டிருப்பினும் கூட அது சுவரொட்டி ஒட்டுதல் அல்லது ஒரு வேளை உணவு கொடுத்தல் என்ற அளவிலேயே உள்ளது.

உண்மையில் இவை ஒரு வருடம் அல்லது அதற்கும் கூடியகாலம் விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவதற்கான குற்றங்கள் அல்ல. இப்படி நீதிமன்றங்களின் முன் கொண்டுவராமல் தடுத்து வைக்க வாய்ப்பாக உள்ளது அவசரகாலச் சட்டமாகும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்காவின் சட்டவிரோத ஆயுதக் கொலைக் கும்பல்களினால் பல தடவை அச்சுறுத்தப்பட்ட கல்யானந்த திரணகம கடந்த வாரம் லண்டனுக்கு வந்திருந்தார் இவர் லண்டனில் உள்ள பல மனித உரிமை இயக்கங்களை சந்தித்தார் கல்யானந்த திரணகம பி பி ஸிக்கு தொலைபேசி மூலம் பேட்டியளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கடல் தீர்த்த விழா

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் அருள்மிகு பூர்வீகநாகதம்பிரான் ஆலய கடலதீர்த்தத் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் (25)

## மின் கம்பங்கள் விழும் நிலையில்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, சித்தன் கேணி, கலைநகர் முதலான பகுதிகளில் இலங்கை மின்சார சபையினரால் நாட்டப்பட்ட மரமின்சாரக் கம்பங்கள் பல கறையான் அரித்தும் உழுத்தும் பழுதடைந்து சரிந்து விழும் நிலையிலுள்ளன. (42)


## சப்ததி அப்த பூர்த்தி அழைப்பு


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு
30
—
05
—
1969



வீரச்சாவு
13
—
10
—
1988

## நினைவு கூருகின்றோம்... 1992-10-13

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

அமல் (நிக்கலஸ் அருள்வாசகம்-வட்டக்கண்டல் - மன்னார்)

நியூமன் (சிற்றம்பலம் பாஸ்கரன் - ஆலங்கேணி - பூநகரி - கிளிநொச்சி)

லெப். அன்று [மு. கிங்ஸ்லி - கொக்குத்தொடுவாய்- மணலாறு]

2ஆம் லெப். நவாஸ் / ரவி [பழனிவேல் - நவீந்திரன் - வல்வெட்டித்துறை - யாழ்.]

2ஆம் லெப். சந்திரன் [இராசதுரை ஜெயச்சந்திரன் - திருநெல்வேலி - யாழ்.]

சண் [ஜெகராசா ஜெயசீலன் - சண் வீதி வேலம்பிராய் தச்சன்கோபுப்.]

கோப்பாய் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ஜெனா [புஸ்பலதா செபமாலை-கன்னாட்டி, அடம்பன் மன்னார்]

## தவறி விட்டது

நீல கைப்பை ஒன்று மிகவும் தேவையான பொருட்களுடனும் இரு அடையாளஅட்டையுடனும் நல்லூர் கோவிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மணியம் வர்த்தக நிலையம், உரும்பராய் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3457)

## 'கிறாஸ் கோப்பேர்ஸ்' முதலாமிடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக் கழகத்தால் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 3-10-92 முதல் 10-10-92 வரை 14 கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ்கோப்பேர்ஸ் விளையாட்டுக்கழகம் முதலாவதாக வென்றது இரண்டாவதாக அரியாலைவிளையாட்டு கழகமும் மூன்றாவதாக அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றது

வலிகாமம் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி எழிலி கொடியேற்றி வைத்தார். கலாநிதி ரி.டபிள்யூ ஜெயகுலராஜா வெற்றி பெறற கழகங்களுககு பரிசில்கள் வழங்கினர்

## சுழற்சி முறையில் உண்ணாவிரதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தினால் பராமரிக்கப்படும் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அனைத்து இடங்களிலும் தியாகி திலீபன் நினைவாக அவர் உண்ணாவிரதம் இருந்த பன்னிரு தினங்களும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

## கொய்யாதோட்டஅணி சம்பியனாகியது

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வந்த சுற்றுபோட்டியின் இறுதி ஆட்டம் கடந்த புதனன்று நிலைய மைதானத்தில் மிகவும் பரபரப்பாக நடைபெற்றது. கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும், கொழும்புத்துறை ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் ஆட்டத்தில் கலந்து கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் முடிவில் கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியனாகியது.

...பதே இவர்களுள் பெரும்பாலானோருக்கு எதிராக உள்ளகுற்றச்சாட்டாகும். இவ்வாறு சிறிலங்கா மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த கல்யாணந்ததிரணகம தெரிவித்தார்.

அப்படி தீவிரவாதத்துடன் சம்பந்தப்பட்டிருப்பினும் கூட அது சுவரொட்டி ஒட்டுதல் அல்லது ஒரு வேளை உணவு கொடுத்தல் என்ற அளவிலேயே உள்ளது.

உண்மையில் இவை ஒரு வருடம் அல்லது அதற்கும் கூடியகாலம் விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவதற்கான குற்றங்கள் அல்ல. இப்படி நீதிமன்றங்களின் முன்

...லண்டனுக்கு வந்திருந்தார் இவர் லண்டனில் உள்ள பல மனித உரிமை இயக்கங்களை சந்தித்தார் கல்யானந்த திர

## மின் கம்பங்கள் விழும் நிலையில்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, சித்தன் கேணி, கலைநகர் முதலான பகுதிகளில் இலங்கை மின்சார சபையினரால் நாட்டப்பட்ட மரமின்சாரக் கம்பங்கள் பல கறையான் அரித்தும் உழுத்தும் பழுதடைந்து சரிந்து விழும் நிலையிலுள்ளன. (42)

...எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் (25)

...ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

## சப்ததி அப்த பூர்த்தி அழைப்பு



புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோயில் பிரதம குருக்களும், ஆதீன கர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ மா. மீனாட்சிசுந்தரக் குருக்களுக்கும் அவர்தம் பாரியாருக்கும் சேவை நலன் பாராட்டி, சாந்தி ஹோமமும்,பாராட்டு விழாவும் இன்று (13-10-92) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறும். புங்குடுதீவு மக்காளகிய தங்களுக்கு நேரில் வந்து அறிவிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இவ் அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்தும், சமாராதனையில் பங்கு பற்றியும் அவர்களின் ஆசியையும் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ: ஸ்ரீநி. நாகேந்திரக் குருக்கள்
லோகேஸ்வரி

(ஜி-5811)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு
3)
—
05
—
1969



வீரச்சாவு
13
—
10
—
1988

### கப்டன் கரிகாலன்

[பொன்னம்பலம் கௌரிபாலன்]

நேற்று... இன்று நாளை..
நாட்கள் நகரட்டுமே!- அதனாலென்ன?
எங்கள் ஊரோடுதானே நீயின்னும்
உயிர் வாழ்கிறாய்!


வரணி வடக்கு
வரணி

— குடும்பத்தினர்

(3344)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு:
02
—
08
—
197)



வீரச் சாவு:
13
—
10
—
1987

### வீரவேங்கை சண்

[ஜெகராசா ஜெயசீலன்]

13-10-87 அன்று கோப்பாயில் இந்தியப்படையுடன் நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த எங்கள் அன்பான செல்வமே. எதிரிகளின் குண்டை உமது நெஞ்சிலே ஏற்றுக்கொண்ட வீரனே. உமது பொன்போன்ற புகழுடல்கூட காணாமல் துடிக்கின்றோமே ராசா. நீரோடும் கண்களிலே, நிற்பதெல்லாம் உம் உருவம். அன்புக்கோயிலே உமது ஆத்மா சாந்திக்காக மலர் பாதங்களுக்கு மலரால் அர்ச்சனை செய்கின்றோம்.

சண் வீதி, வேலம்பராய்,
தச்சந்தோப்பு.

உமது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி,
தங்கைமார், அண்ணா (லண்டன்)

(5580)

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

அமல் (நிக்கலஸ் அருள்வாசகம்-வட்டக்கண்டல் - மன்னார்)

நியூமன் (சிற்றம்பலம் பாஸ்கரன் - ஆலங்கேணி - பூநகரி - கிளிநொச்சி)

லெப். அன்று [மு. கிங்ஸ்லி - கொக்குத்தொடுவாய்-மணலாறு]

2ஆம் லெப். நவாஸ் / ரவி [பழனிவேல் - நவீந்திரன் - வல்வெட்டித்துறை - யாழ்']

2ஆம் லெப். சந்திரன் [இராசதுரை ஜெயச்சந்திரன் - திருநெல்வேலி - யாழ்.]

சண் [ஜெகராசா ஜெயசீலன் - சண் வீதி வேலம்பிராய் தச்சன்கோபுப்.]

கோப்பாய் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ஜெனா [புஸ்பலதா செபமாலை-கன்னாட்டி, அடம்பன் மன்னார்]

விஜி [கோமதி பூவிலிங்கம்-ஆலடி ஒழுங்கை, கோண்டாவில் - யாழ் ]

பிறேமன் (சோமசுந்தரம் - இளங்கோ - சாரதா வீதி, சங்கத்தானை சாவகச்சேரி, - யாழ்.]

கோண்டாவில் - காரைக்கால் பகுதியில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

அக்பர் [அருணாசலம் பாலகுமார் - கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு - யாழ் ]

ராஜன் [இராஜதுரை இலங்கேஸ்வரன்-தாவடி, கொக்குவில் - யாழ் ]

சுன்னாகத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான நாடகநெறியாளர் வி. எம். குகராஜா.

1988 ஆம் ஆண்டு கொக்குவில் - கேணியடிப் பகுதியில் இந்தியப் படையுடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் கரிகாலன் [பொன்னம்பலம் கௌரிபாலன் வரணி வடக்கு]

யாழ். காங்கேசன்துறை வீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

டிஸ்கோ ரவி [அருளானந்தம் ரவி] மற்றும். தெல்லிப்பளை, இணுவில் பகுதிகளில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான இருவர்.

1990ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் இராணுவத்தால் சுடடுக்கொல்லப்பட்ட இளைஞன் உட்பட இரண்டு தமிழர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன் உட்பட - வந்தாறுமூலையைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - 4ஆம் கட்டை சிறிலங்காப்படை மினிமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

லெப். நேசன் (சின்னத்தம்பி சற்குணசீலன் - வற்றாப்பளை, முள்ளியவளை - முல்லைத்தீவு.)

லெப். சூரி [மாரிமுத்து வசந்தகுமார் - வேலணை, யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(ஜி-5814)

சிந்தனைக்கு

இலட்சியம், சாதனங்களை நியாயப்படுத்தும்.
— மேத்யூ ப்ரையர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 13-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## புலிகளின் பெருவெற்றி

இராணுவத் தலைமைப் பீடத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி அதிகாரங்களை மீண்டும் கூட்டுப்படைகள் தலைமையகத்திடம் ஒப்படைக்கும் அளவிற்கு அரசிற்கு நிலைமை ஏற்பட்டிருப்பதானது விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றியே என ஏ. எப். பி- செய்தியாளர் தனது விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

ஏ. எப். பி. செய்தியாளரின் இவ் விமர்சனத்தில் தவறு எதுவும் இல்லை என்றே கூறலாம். கடந்த வருட இறுதியில் இருந்து யாழ்ப்பாணத்தை எப்பொழுது இராணுவம் கைப்பற்றும், புலிகளின் ஆதிக்கம் எப்பொழுது முடிவிக்குக் கொண்டுவரப்படும் என நாட்களை சிங்கள அரயல் வாதிகள் எண்ணிக் கொண்டிருக்கையில், ஆயுதப் படைகளின் அதிகார பீடத்தில் கடந்த ஆறு மாத காலத்திற்குள் இரு தடவைமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. இது சிங்களப் பேரினவாதிகளுக்குக் கிடைத்த தோல்விஎன்பதிலும், தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் கிடைத்த வெற்றி எனக் கூறுவதிலும் தவறு என்ன உள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் 'ஒப்பரேசன் வலம்புரி' இராணுவ நடவடிக்கை முடிவுற்ற வேளையில் - தீவுப்பகுதியையும், பூநகரிப் பகுதியையும் இராணுவம் ஆக்கிரமித்ததின் பின்னர் - அப்பொழுது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ''யாழ்ப்பாண நகருக்கு 1. 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளோம். எவ்வேளையிலும் யாழ்ப்பாண நகருக்குள் இராணுவம் பிரவேசிக்கலாம்" என்றார். இது சிறிலங்கா பேரினவாதிகளுக்கு பெரும் மகிழ்ச்சி கொடுக்கும் அறிவிப்பாக இருந்தது. அரசாங்கமும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீது நம்பிக்கை வைத்தது கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தை மீண்டும் உருவாக்கி (நவம்பர் 1991) பொறுப்பையும் அவரிடம் கையளித்தது. ஆனால், மார்ச் மாத நடுப்பகுதிவரை யாழ்ப்பாண படை எடுப்பை அவரால் நடத்த முடியவில்லை. ஆனால், புலிகள் மேற்கொண்ட யுத்த தந்திரோபாய மாற்றம் இக்காலப் பகுதிக்குள் படையினருக்கு பேரிழப்பை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியிருந்தது. சூழ்நிலையும் ஹமில்டன் வனசிங்காவிற்கு எதிராக மாறியிருந்தது.

மார்ச் மாத இறுதியில் கூட்டுப்படை தலைமையகத்திடம் இருந்து அதிகாரங்கள் பறிக்கப்பட்டு முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

# இராணுவ அதிகார அமைப்பில் திடீர் மாற்றம்; முப்படைத் தளபதிகள் மட்டத்தில் பேரதிர்ச்சி!

விடுதலைப் புலிகள் தனி நாட்டுக்கான போரைத்தீவிரமாக்கி வரும் இவ்வேளையில் உயர் இராணுவ வட்டாரங்கள் தனித்தனி பாதையில் செல்வது போல் தெரிகின்றது.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் ஆயுதப் போரின் இப்போதைய கட்டம் மிக மோசமானதாகவும், இழப்போரின் எண்ணிக்கை அதிகமாக சிறு வெற்றிகள் மட்டுமே சாதிக்கப்படுவதாகவும் இருக்கின்றது. விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தி அரசியல் தீர்வொன்றுக்கு இணங்கச் செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருந்தது. பாதுகாப்பு உயர்பீடத்தினர் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா போன்றோருக்கு இத்தகைய விளக்கத்தினையே அளித்து வந்தனர். இதனாலேயே போருக்கான முடிவு காலம் அண்மித்து வருவதாக விஜயதுங்காவும், பகிரங்கமாக கூற ஆரம்பித்து இருந்தார். ஆனால் அண்மைக்கால துரதிஷ்ட சம்பவங்கள் நேர்ந்து விட்ட பின்னாலே யாருக்கு முடிவு காலம்? என்றே கேட்கத் தோன்றுகிறது.

சில காலத்திற்கு முன்னர் கொந்தளித்துக் கொண்டிருந்த பிரச்சினைகள் வருட ஆரம்பத்தில் தணிக்கப்பட்டதாக கருதப்பட்ட போதிலும் அது மீண்டும உச்சம் பெற்றிருப்பதையும் படையினர் மத்தியில் கேள்வி எழுப்புவதாக மாறியிருப்பதையும் உணர முடிகிறது.

சிலர் இத்தகைய முரண்பாடுகள் மூடி மறைக்கப்பட வேண்டும் என்று கருதக்கூடும். ஆனால் இவற்றைப் பொது மக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலமே நிலைமை மோசமடைவதற்கு முன்னர் நல்ல விளைவுகளைப் பெறுவற்கு ஏதுவாக இருக்கும்.

படைத்தளபதிகளுக்கிடையிலான முரண்பாடு எனப் பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராணுவத்தளபதிக்கும் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க மற்றும் கூட்டுப்படைத் தலைமைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிற்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளே கூர்மையானதாகும்.

இவ்வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி பிரேமதாசா நேரடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டிய நிலைமைக்கு இம்முரண்பாடுகள் முதிர்ச்சி அடைந்தன. இந்நிலையிலேயே கே. என். சொக்ஸி ஒரு நடுநிலை முயற்சியை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது.

கூட்டுப் படைத்தளபதிக்கு ஊடாக அல்லாமல் சகல அதிகாரங்களும் தம்மிடம் கையளிக்கப்பட்டால் நல்ல பயனைக்காட்ட முடியும் என்று முப்படைகளின் தளபதிகளும் ஆயுதப்படைகள் அனைத்தினதும் தளபதியான ஜனாதிபதி பிரேமதாசாவை அப்போது கேட்டுக்கொண்டனர்.

இந்த நேரத்தில் கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்காவும் பலத்த ஆட்சேபனைகள் தெரிவித்தபோதும் முப்படைகளினதும் தளபதிகளே வெற்றி பெற்றனர்.

இது மார்ச் 1992இல் நடந்தது. ஆனால் ஆறு மாதங்கள் முடிவதற்கு இடையில் தவறு கூட்டுப்படைத் தளபதியில் அல்ல என உணர்ந்து ஜனாதிபதி பிரேமதாசா, அதிகாரங்களைக் கைமாற்றும் முடிவைத் தானே மேற்கொள்ள வேண்டியது ஆயிற்று.

> சிறிலங்கா இராணுவ உயர்பீடத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் கருத்து மோதல்கள் பற்றி ''சண்டே டைம்ஸ்'' இராணுவச் செய்தியாளர் கட்டுரையின் ஒரு பகுதியின் மொழியாக்கம் இது.

இதேவேளைகூட்டுப்படைத் தலைமையகம், மற்றும் பாதுகாப்புசபை, இராணுவ உயர் மட்டங்களில் சர்ச்சைகள் ஏற்பட்டிருப்பதாக கசிவான செய்திகள படையினர் மத்தியில் பெருமளவில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேமதாசா இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டுநாடு திரும்பியபோது இக் குழப்பம் உச்சக் கட்டத்தை அடைந்து இருந்தது.

கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து முன்னணிப் பாதுகாப்புஅரண்களை ஊடறுத்து உள்நுழைந்த புலிகள் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுததளபாடங்களை அள்ளிச்சென்றது, குழப்பங்களுக்கு நெய் வார்ப்பது போல் அமைந்தது.

ஒரு சில நாட்களுக்கு முன்பு தான் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணாவிற்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிற்கும் இடையே மிகவும் சூடான முறையில் வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றிருந்தன. பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் கட்டைக்காட்டுச் சம்பவம் இடம்பெற்றது தொடர்பான கருத்துப்பரிமாறலின் போதே இந்த வாக்குவாதம் ஏற்பட்டது.

### உயரும் இழப்புக்கள்

ஆனால் இராணுவம்மற்றும் பாதுகாப்புப் படையினரின் உயிரிழப்புகள் அதிகரித்துச் செல்வது அதிபர் பிரேமதாசாவைக் கவலைகொள்ளச் செய்தமையே கடந்த புதனன்று முதல் கூட்டுப்படைத் தலைமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கு காரணமாகியது முப்படைத் தளபதிகளையும் அழைத்த அதிபர் பிரேமதாசா தமது முடிவைத் தெரிவித்தபோது அவர்கள் அதிர்ச்சி அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். அதாவது விமானப்படைத்தளபதி டெரன்ஸி குணவர்த்தனா, ''சண்டை நடக்கும் பகுதிகளுக்கு நான் நேரில் விஜயம் செய்வதற்கும் கூட்டுப்படைத் தலைமையின் அனுமதி பெற வேண்டுமா? என்று அக்கட்டத்தில் கேள்வி எழுப்பினார்'' என்றால்... அவர்தான் இப்போதும் விமானப் படைத்தளபதி என்பதும், அது அவரது கடமை என்பதும் கூட அவருக்கு மறந்துபோய் விட்டதா?

அதேவேளை இராணுவத்திலிருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கை உயர்ந்து செல்வதும் அரசுக்கு கவலை அளிக்கும் மற்றுமொரு விடயமாகும்.

பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் இத்தகைய கருத்துவேறுபாடுகள் நீடிக்கும் நிலையில் சக்தி வாய்ந்த எதிரியுடன் போரில் ஈடுபட முடியுமா என்பதே இப்போது முக்கிய கேள்வியாகியுள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என்று அதிகாரபூர்வமான பொது அறிவிப்பு வெளியான பின்பும் படைகளிலிருந்து தப்பியோடியோர் திரும்பி வருவதாக இல்லை. படைகளுக்கு புதியதாக ஆட்களைச் சேர்ப்பதும் உற்சாகம் தருவதாக இல்லை. வெலிக்கந்த போன்ற பகுதிகளிலிருந்தும் சிங்களக் குடியேற்ற வாசிகள் வெளியேறத் தொடங்கியிருப்பதும் இவற்றுடன் தொடர்புடையதொன்றே.

அரசாங்கம் இத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியாக முகம் கொடுக்க தவறினால் சிறிலங்காவில் மீண்டும், ஒரு தடவை அரசியல் ஸ்திரமற்ற தன்மை தோன்றுவது தவிர்க்க முடியாதது என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# சிறிலங்கா இராணுவத்திற்கு கடந்த மாதம் ஒரு 'கறுப்பு செப்டம்பராக' அமைந்தது

## அரைக்கம்பத்தில் பறந்தராணுவ கொடியை இறக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சிறிலங்கா பாதுகாப்புப்படையினருக்கு கடந்த மாதம் ஒரு''கறுப்பு செப்டம்பர்'' மாத

விடுதலைப்புலிகள் முகாமிற்குள் நுழைய முன்னர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கமாண்டின் வெயிகள் எனப்படும் கட்டளை புணியக

மாறியிருப்பதையும் உணர முடிகிறது.
சிலர் இத்தகைய முரண்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்காவும் பலத்த ஆட்சேபனைகள் தெரி

காப்பு அரண்களை கடந்து உள்நுழைந்த புலிகள் கோடிக்

மையின் அனுமதி பெற வேண்டுமா? என்று அக்கட்டத்தில்

றனர்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா "யாழ்ப்பாணநகருக்கு 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளோம். எவ்வேளையிலும் யாழ்ப்பாண நகருக்குள் இராணுவம் பிரவேசிக்கலாம்" என்றார். இது சிறிலங்கா பேரினவாதிகளுக்கு பெரும் மகிழ்ச்சி கொடுக்கும் அறிவிப்பாக இருந்தது. அரசாங்கமும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீது நம்பிக்கை வைத்தது கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தை மீண்டும் உருவாக்கி (நவம்பர் 1991) பொறுப்பையும் அவரிடம் கையளித்தது. ஆனால், மார்ச் மாத நடுப்பகுதிவரை யாழ்ப்பாண படை எடுப்பை அவரால் நடத்த முடியவில்லை. ஆனால், புலிகள் மேற்கொண்ட யுத்த தந்திரோபாய மாற்றம் இக்காலப் பகுதிக்குள் படையினருக்கு பேரிழப்பை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியிருந்தது. சூழ்நிலையும் ஹமில்டன் வனசிங்காவிற்கு எதிராக மாறியிருந்தது.

மார்ச் மாத இறுதியில் கூட்டுப்படை தலைமையகத்திடம் இருந்து அதிகாரங்கள் பறிக்கப்பட்டு முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுதே இராணுவ ரீதியாகப் புலிகள் பெரு வெற்றி பெற்று விட்டனர் என்பதே உண்மை. அதாவது அன்று பதவி கைமாறிய போதே சிறிலங்கா இராணுவம் தனது தோல்வியை மறைமுகமாக ஏற்றுக் கொள்ள வேண்டி இருந்தது.

ஆனால், இராணுவத்தினரின் ஒருபகுதியினர், தோல்விக்கு இராணுவத்தில் இதுவரை பொறுப்பு வகித்தவர்களே காரணம் எனக் குற்றம் சுமத்தினர். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் போரில் தம்மால் வெற்றி பெறமுடியும் எனவும் மார்பு தட்டினர். ஆனால், அவர்கள் பொறுப்பேற்று ஆறுமாதகாலமாகியும் போர் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக பெரும் இழப்புக்களையே சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து இராணுவ அதிகாரபீடத்தில் மீண்டும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் தான்தற்பொழுது புலிகள் இராணுவ ரீதியாகப் பெருவெற்றி பெற்றுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இவ்வெற்றியை மார்ச் மாதத்தில் இராணுவ அதிகார பீடத்தில் ஏற்பட்ட மாற்றத்தின்போது ஏற்றுக் கொள்ளாதவர்களும் தவிர்க்க முடியாது ஏற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், சிறிலங்கா இராணுவத்தில் உள்ள இரு சாராரும் விடுதலைப்புலிகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். அதாவது, இராணுவத்திலுள்ள தீவிர போக்குடையோர்களும், மிதமான போக்குடையோரும் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். மேலும், இராணுவத்தினருக்குள் என்றுமில்லாதவாறு முரண்பாடுகளும், மனத்தளர்ச்சியும் அதிகரிக்கும் அளவிற்கு இராணுவத்தரப்பு தோல்விகளைச் சந்தித்துள்ளது. நேரடியாகத் தளபதிகள் முரண்பட்டுக் கொள்ளும் அளவிற்கு இந்நிலை சென்றுள்ளது.

அதாவது, இராணுவத்திற்குள் எப்பொழுது கருத்து மோதல்களும் முரண்பாடுகளும் தலைதூக்குகின்றதோ அப்பொழுதே இராணுவம் தனது வெற்றியில் நம்பிக்கை இழந்துவிட்டது என்பதே பொருளாகும். வெற்றி நோக்கி முன்னேறும் இராணுவத்திற்குள் முரண்பாடுகள் எழுவது குறைவு. எழுவதாயினும் விரைவில் நீக்கப்பட்டும் விடும். இந்நிலையில், சிறிலங்கா இராணுவத்திற்குள் நிரந்தர முரண்பாடுகளை தோற்றுவிக்கும் அளவிற்கு இராணுவத்திற்கு பாரிய இழப்புக்களை உருவாக்கியுள்ளதால் விடுதலைப்புலிகள் யுத்தத்தில் பாரிய வெற்றியை ஈட்டியுள்ளதை எதிரிகள்கூட ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

# சிறிலங்கா இராணுவத்திற்கு கடந்த மாதம் ஒரு 'கறுப்பு செப்டம்பராக' அமைந்தது

## அரைக்கம்பத்தில் பறந்தராணுவ கொடியை இறக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சிறிலங்கா பாதுகாப்புப்படையினருக்கு கடந்த மாதம் ஒரு "கறுப்பு செப்டம்பர்" மாதமாகவே இருந்தது என்று கொழும்புப்பத்திரிகை ஒன்று விமர்சனம் செய்துள்ளது.

இராணுவ முகாம்களில் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்ட இராணுவ கொடியை இறக்க முடியாத அளவிற்கு இராணுவத்தினரின் உயிரிழப்புக்கள் நிகழ்ந்தன என்றும்,

முப்படை, பொலிஸ் துறைகளில் கடமையாற்றுபவர்கள் இறந்தால் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விடுவது படையினரின் மரபாகும் என்றும், கடந்த மாதத்தில் 'கறுப்பு செப்டம்பரில்' மாத்திரம் 97 இராணுவத்தினர் உயிரிழந்தனர் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளானார்கள் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி திருக்கோணமலை அல்லை படகு பாதையில் இராணுவத்தினர் பிரயாணம் செய்த பாரிய படகை தகர்த்து அதில் பிரயாணம் செய்த இராணுவத்தினரை உயிரிழக்கச் செய்ததுடன் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகின என்றும்,

இதன் பின்னர் திருக்கோணமலைபாலம்போட்டாறு, வெலிஓயா, முல்லைத்தீவு, கட்டைக்காடு, மட்டக்களப்பு, காயங்கேணி ஆகிய பகுதிகளில் அடுத்தடுத்து நடந்த மோதல்களில் டசின் கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் கூறியுள்ளது.

தீவிரவாதிகளின் இந்த தாக்குதல்களுக்கு எல்லாம் சிகரம் வைத்தால் போல் அமைந்தது கட்டைக்காடு முகாம் தாக்குதல் என்றும் அப்பத்திரிகை விமர்சித்துள்ளது.

எண்பது நிமிட நேரம் நடந்த அதிரடித் தாக்குதல்களின் பின்னர் ஐந்து கோடி ரூபா பெறுமதியான நவீன ஆயுதங்களை விடுதலைப்புலிகள் எடுத்துச் சென்று விட்டனர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்து இச்செய்தி இராணுவ தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டதும் அங்கு பெரும் பரபரப்புநிலவியது. சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க முப்படைத் தளபதிகளையும் அழைத்து அவசர மாநாடு நடத்தினார்.

இதன் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில்உள்ள இராணுவத்தினரை 24 மணித்தியாலமும் உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவுகள் பறந்தன என்றும், இது குறித்து உயர்மட்ட விசாரணைக்கும்உத்தரவிடப்பட்டது.

கட்டைக்காடு முகாம் வெற்றிலைக்கேணி முகாமின் ஒரு பகுதியாகும். இம் முகாமைச் சுற்றி பாதுகாப்பு முன்னிலை அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலாம் திகதி வியாழக்கிழமை இரவு 11.50 மணிக்கு நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கட்டைக்காடு இராணுவ முகாம் மீது அதிரடித்தாக்குதல்களை ஆரம்பித்தனர் என்றும்,

சிறு பீரங்கி, ஆர்.பி.ஜி. இயந்திர துப்பாக்கிகள், கிரனைட் போன்ற ஆயுதங்களினால் பாதுகாப்பு முன்னிலை அரண்களை தாக்கி நிர்மூலமாக்கினார்கள் சுமார் 80 நிமிட நேரம் இத் தாக்குதல் நடந்தது 11.50க்கு ஆரம்பமானதாக்குதல் 1-10 க்கு முடிவடைந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாமைவிட்டு பின்வாங்கினர் என்றும்,

விடுதலைப்புலிகள் முகாமிற்குள் நுழைய முன்னர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கமாண்டிங் வெயிகள் எனப்படும் கட்டளை பணியக வாகனமான ஜீப்பை கைப்பற்றினர். இந்த ஜீப்பில் நவீன தொலை தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன இதனைலெப்டினனட் கேணல் ஒருவரே பாவிக்க முடியும் என்றும்,

தாக்குதல் நடத்தும் சமயங்களில் இந்த வாகனத்தில் இருந்தே கமாண்டர் உத்தரவுகளை பிறப்பிப்பார் என்றும், இதனைவிட இந்த வாகனத்தின் மற்றொரு சிறப்பம்சம்; வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்த ஒரு முகாமுடனும் இந்த வாகனத்தில் இருந்து தொடர்பு கொள்ள முடியும். இந்த ஜீப்பில் ரொக்கட் லோஞ்சர் ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தது இவ்வளவு நவீன வசதிகளை கொண்ட 'கமாண்டிங் வெயிகள்' தான் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது என்றும் அந்த விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி நிலத்தில்

## ராஜீவ் சமாதி அமைப்பதற்கு காந்தியின் பேரன் எதிர்ப்பு

(டில்லி)

மகாத்மாகாந்தியின் சமாதியில் ராஜீவின் சமாதி அமைப்பது மகாத்மாவின் புனிதத் தன்மைக்கு செய்யும் களங்கமாகும் என்று மகாத்மா காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தி தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியின் சமாதிக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதாகவும் அவர் இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியிலுள்ள மகாத்மா காந்தி சமாதியை ராஜ்காட் சமாதி சமிதி என்ற அமைப்பு பராமரித்து வருகிறது. காந்தி சமாதி அமைக்கப்பட்டபோது அதற்கு 36 ஹெக்டேயர் நிலம் ஒதுக்கப்பட்டது. பின்னர் இச்சமாதியின் மேற்குப் பகுதியில் நேருவின் சமாதி வைக்கப்பட்டு சாந்திவனம் என பெயரிடப்பட்டது. இந்திராகாந்தி இறந்தபோது காந்திசமாதியில் இருந்து 12 ஹெக்டேயர் நிலம் எடுக்கப்பட்டது. சரண்சிங் இறந்த போது மேலும் 6.4 ஹெக்டேயர் நிலம் எடுக்கப்பட்டது.

தற்போது ராஜீவ் காந்திக்கு சமாதி அமைக்க 4 ஹெக்டேயர் நிலத்தை எடுக்க முயற்சிப்பது ஆக்கிரமிப்புச் செயலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தளபதிகள் மாநாடு

இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் கலந்து கொள்ளும் மாநாடு நேற்றுப் புதுடில்லியில் தொடங்கியது இந்த மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும் வழமையான ஒன்றுதான் என்றும் பிரதமர் பி.வி நரசிம்மராவினால் இம் மாநாடு தொடக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெடிமருந்து நிபுணர் கைது

ஈராக்கில் அமெரிக்க வெடிமருந்து நிபுணரான கால் கைது செய்யப்பட்டார் எனினும் ஐ.நா. சபை உடனடியாக தலையிட்டதால் அவர் பாக்தாதில் ஐ.நா.சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு ஈராக்கை விட்டு வெளியேற்றப்பட்டார்.

## ரஷ்யாவிற்கு அமெரிக்கா தானிய உதவி கிடைக்கும்

ரஷ்யாவில் நிலவும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் ரஷ்யாவுக்கு தானிய கடனுதவியாக 52 கோடியே 50 இலட்சம்டொலர்களையும் பொருளாதார உதவியாக இருபத்தைந்து கோடி டொலர்களையும் அமெரிக்கா வழங்கியுள்ளது.

ரஷ்யா தனிப்பட்ட கடனைப் பெற முடியாதிருந்ததை தவிர்க்குமுகமாகவே அமெரிக்கா இந்த கடனுதவியை வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவிற்கான இக்கடனுதவி மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படுவதாகவும் கடந்த ஆண்டு புஷ் நிர்வாகம் 507 கோடி டொலர்களை, அமெரிக்கப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கென கடனுதவியாக வழங்கியதாகவும் அமெரிக்க விவசாய இணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## திரிபுராவில் சட்டப்பேரவை தேர்தல்

திரிபுரா மாநிலத்தில் இவ் ஆண்டு இறுதிக்குள் சட்டப் பேரவை தேர்தலை நடத்தலாம் என்று அம் மாநில முதல்வர் சமீர் ரஞ்சன் பர்மன் கூறியுள்ளார், புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; எனினும் இது பற்றி மத்திய அரசும் தேர்தல் ஆணையாளரும் தான் முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

ஈழநாதம்

# ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு சுப்பிரமணியம் சுவாமி மனு

[சென்னை]

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது பல்வேறு குற்றங்களைச் சுமத்தும் விண்ணப்பம் ஒன்றை ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான பதினைந்து உறுப்பினர் கொண்ட குழு நேற்று தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பித்தது.

கூட்டுறவுத் துறை நிறுவனமான திக் நிறுவனத்துக்கு தனியார் சலுகை பெறும்படி நடவடிக்கை எடுத்ததிலும் சுமார் 120 ஆசிரிய பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கியதிலும், முதலமைச்சர் சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கு அரசுஉடைமையான நிலம் ஒன்றை விற்றதிலும் முறைகேடுகள் நடந்திருப்பதாக அந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் முன்னாள் அமைச்சர்கள் ராஜாராம், சுவாமிநாதன், திருநாவுக்கரசு பேரவை முன்னாள் சபாநாயகர் பாண்டியன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

## இலங்கையில் 70,000 பேர் பார்வை இழந்துள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் ஐம்பத்தைந்து வயதை எட்டியவர்களில் 15 லட்சம் பேருக்குக் கண்பார்வைக் குறை இருப்பதாக ஆய்வொன்று கூறுகின்றது. இவர்களில் சுமார் 70,000 பேர் கண் பார்வையை முற்றாக இழந்தவர்கள்.

இலங்கையின் ஜனத்தொகை ஒரு கோடியே 70 லட்சத்துக்கு 37 கண் வைத்தியர்கள்தான் சேவையில் உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. கண் ஊனமுற்றவர்கள் அதிகமாகக் கிராமங்களிலேயே காணப்படுகின்றனர், ஆனால் கண் வைத்தியர்களில் எண்பது விகிதத்தினர் கொழும்பிலும் கண்டியிலுமே தொழில் பார்க்கிறார்கள். இலங்கையில் பலர் விழிப்புலனை இழப்பதற்கு நீரிழிவு நோயே பிரதான காரணம் என்று கண்வைத்திய நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சீரான உணவுப் பழக்கவழக்கங்களால் விழிப்புலன் இழப்பை ஓரளவில் தடுக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

500 கோடி உலக ஜனத்தொகையில் 40 மில்லியனுக்கு அதிகமானவர்கள் முற்றாகக் கண் பார்வையை இழந்தவர்கள் எனக் கூறப்படுகிறது, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாது விட்டால் இன்னும் 25 வருடங்களில் விழிப்புலனற்றவர்கள் தொகை உலகில் இரட்டிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பென்ஷன் வவுச்சர் 22 இல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஒக்டோபர் மாதத்திற்கான பென்ஷன் வவுச்சர்களை உரியவர்களுக்கு எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில்

## நட்ட ஈட்டுக் காசோலைகள் மாயமாய் மறைவு

காரைதீவை சேர்ந்த நான்கு குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நட்ட ஈட்டுக்காசோலைக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

வன்செயல் சம்பவங்களில் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு கொடுப்பனவிற்கான கடிதம் இவர்களுக்கு கிடைத்திருந்தது. இதனை அம்பாறை செயலகம் அனுப்பிவைத்திருந்தது. இக்கடிதத்தைக் கொண்டு தேசிய சேமிப்பு வங்கிக்குச் சென்றபோது காசோலை தமக்கு வரவில்லை என தெரிவிக்கப்பட்டதாம்.

இது குறித்து அம்பாறை செயலகத்திற்குச் சென்று விசாரித்த போது காசோலை அனுப்பப்பட்டு விட்டதாகவும் எங்கு கைமாறிவிட்டதோ தெரியவில்லை எனவும் தேடிக்...


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
தற்காலிக வேலை மேற்பார்வையாளர்

பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் வேலை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்:-

1. கல்வி - க.பொ.த. (சா த) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். அத்துடன் இலங்கை தெமிழ் நட்...


## ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் கலைக்கூடத்தில் யாழ். மாவட்ட அனைத்துப் பாடசாலை மாணவ மாணவியரின் ஓவிய சிற்பக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது

எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இக் கண்காட்சி நடைபெறும் மேலும் இக் கண்காட்சியில் கோட்ட மட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சிற்ப ஓவியங்கள் இடம் பெறுகின்றன. இக் கண்காட்சியில் ஆசிரியர் ஓவியப் போட்டிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்களும் இடம் பெறுகின்றன' (பா)

புதிய

ஆராய்வதற்கென தனிநபர் குழு ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருக்கிறது. மேற்படிஅனுமதி குறித்த மேன் முறையீடுகளை அனுப்ப விரும்புபவர்களும், அனுமதிக்கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் மேற்படி தனிநபர்குழுவிற்குமேன்முறையீட்டுக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலக்கம் 20 வாட்பிளேஸ், கொழும்பு- 7 என்ற முவவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி புதிய அனுமதிக்கான பதிவுகள் யாவும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட வேண்டும்.

பதிவு செய்யத்தவறியவர்களது பெயர்கள் நவம்பர் முதலாம் திகதி ரத்து செய்யப்பட்டு அவ்விடங்கள் வெற்றிடங்களாகக் கருதப்பட்டு அவற்றின் தொகை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் 90-91 ஆம் கல்வி ஆண்டில் இப்பல்கலைக்கழகத்திற்கு சுமார் 893 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிசாரை பார்வையிட யாழ். வர பெற்றோர் முயற்சி

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 சிறிலங்கா பொலிசாரையும் பார்வையிட பெற்றோரை யாழ்ப்பாணம் அழைத்து செல்ல கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாக சங்கைக்குரிய மாதம்பாகம அஸ்ஸாகி தேரோ கடந்த சனிக்கிழமை கொழும்பில் தெரிவித்துள்ளார்.

தாங்கள் யாழ்ப்பாணம் செல்ல கூட்டுப்படைத் தலைமையலுவலகத்திற்கு கடந்த மாதமே விண்ணப்பம் செய்தும் இதுவரை அவர்களிடமிருந்து பதிலேதும் கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

1990 ஜூன் மாதம் சிறிலங்காவுடனான யுத்தம் ஆரம்பித்ததை அடுத்து 41 பொலிசார் சண்டையின் போது புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டமை தெரிந்ததே.

## போட்டி

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் ''யுனிசெப்'' நிறுவனம் உதவியுடன் சனசமூக நிலையங்களுக்கிடையே சுகாதாரம் சம்பந்தமான வினா விடைப் போட்டி ஒன்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (24)

பிரிட்டிஷ்

காரத்திற்கு பின்னர் சிறிலங்கா வரும் முதலாவது பிரிட்டன் அமைச்சர் இவராவார். இவருடன் தென்னாசிய விவகாரத் திணைக்களத்தலைவர் மார்ட்டின் வில்லியம்ஸ், மற்றும் போல் ஸ்பெல்லர், திருமதி லென்னாக்ஸ் போயிட் ஆகியோரும் வருகைதரவுள்ளனர்.

சிறிலங்கா

சட்டபூர்வ சாராயத்தின் தேவை சிறிலங்காவில் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குடிவகைகள் பாவிப்பது குறிப்பாக சாராயம் நுகர்வது இங்குள்ள பொதுக் கலாசாரமாகியுள்ளது. என்றும்ஒய்வின்போதும், களிப்பின்போதும் சாராயம் நுகர்வது சம்பிரதாயமாகியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீராவோடையில்

## 350 தமிழ்க் குடும்பங்கள் நிவாரணமின்றி அவதி

[செங்கலடி]

கோறளைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீராவோடை தமிழ்க் கிராம சேவை அலுவலர் பிரிவில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இடம் பெயர்ந்து வாழும் 350 தமிழ்க் குடும்பங்கள் நிவாரண உதவிகள் கிடைக்காமல் கஷ்டமுறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இடம் பெயர்ந்து இருவருடங்களாகியும் இவர்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கொள்ளையிட

கரலியத்த உடுன்பத்துவ சந்தியில் வைத்து அவர்களை மடக்கிப் பிடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

'ஹைஏஸ்' வாகனம் ஒன்றிலேயே இவர்கள் வந்தனர். இவர்களிடம் இருந்து ரி- 56 ரக துப்பாக்கி மற்றும் வெடி குண்டுகளும் கைப்பற்றப்பட்டது.

கைதானோரில் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரும் தற்போது கடமையிலிருக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் அடங்குவதாகவும்,

வாகன இலக்கத் தகடுகள் சீருடைகள், கூரிய கத்திகள் படையினர் பயன்படுத்தும் சின்னங்கள் என்பனவும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

800 சிப்பாய்

ஆட்சேர்க்கும் அரசாங்கத்தின் முயற்சி வெற்றி பெறவில்லை எனவும் தெரியவருகின்றது அரசாங்கம் மாதாந்தம் 3000 பேர் என்ற வீதத்தில் இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்ட திட்டமிட்டுள்ளபோதும், நேர்முகப் பரீட்சைக்கு சிலநூறுபேரே வந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு சேர முன்வந்தவர்களில் அநேகர் கல்வியறிவு மிகக்குறைந்த கிராமப்புற ஏழைகளேஅதிகம் எனவும் தெரியவருகின்றது.

சிங்கள இளைஞர்கள் இவ்வாறு இராணுவத்தில் சேர பின்னடிப்பதானது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்
1991 / 1992

இப்பல்கலைக்கழகத்தில் 1991 / 1992 ஆம் கல்வி...



பணியாட்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள புடைவைக்கடையொன்றிற்கு புடைவை வாணிபத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பிக்க விரும்புவோர்கள் 18 - 10 -92 க்கு முன் பின்வரும் சான்றிதழ்களுடன் யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி செயலகத்திற்கு காலை 10.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

1, பிறப்புச்சான்றிதழ்
2. கல்விச் சான்றிதழ்
3 வேலை முன் அனுபவச்சான்றிதழ்

கிறார்கள். இலங்கையில் பலர் விழிப்புலனை இழப்பதற்கு நீரிழிவு நோயே பிரதான காரணம் என்று கண்வைத்திய நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்

## மாயமாய் மறைவு

காரைதீவை சேர்ந்த நான்கு குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நட்ட ஈட்டுக்காசோலைக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

வன்செயல் சம்பவங்களில் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு கொடுப்பனவிற்கான கடிதம் இவர்களுக்கு கிடைத்திருந்தது. இதனை அம்பாறை செயலகம் அனுப்பிவைத்திருந்தது. இக்கடிதத்தைக் கொண்டு தேசிய சேமிப்பு வங்கிக்குச் சென்றபோது காசோலை தமக்கு வரவில்லை என தெரிவிக்கப்பட்டதாம்.

இது குறித்து அம்பாறை செயலகத்திற்குச் சென்று விசாரித்தபோது காசோலை அனுப்பப்பட்டு விட்டதாகவும் எங்கு கைமாறிவிட்டதோ தெரியவில்லை எனவும் தேடிக் கண்டுபிடித்துச் சொல்கிறோம் எனவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

### தனி

சிங்க, உயர் கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீட், சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளர் அநுரா பண்டார நாயக்கா, லக்ஸ்மன் ஜெயக்கொடி, எம் எச் எம் அஷ்ரப் எம், சிவசிதம்பரம், மாவை சேனாதிராசா, ஆகியோர் கலந்துகொண்டனர். இதேவேளை இந்தயோசனை தொடர்பாக தெரிவுகுழுவின்தலைவர்ஏனைய தமிழ்க்குழுக்களுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் 90-91 ஆம் கல்வி ஆண்டில் இப்பல்கலைக்கழகத்திற்கு சுமார் 893 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

ப்பாக சாராயம் நுகர்வது இங்குள்ள பொதுக் கலாசாரமாகியுள்ளது. என்றும்ஓய்வின் போதும், களிப்பின்போதும் சாராயம் நுகர்வது சம்பிரதாயமாகியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினர் பயன்படுத்தும் சின்னங்கள் என்பனவும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னடிப்பகானது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

தற்காலிக வேலை மேற்பார்வையாளர்

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் வேலை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்:-

1. கல்வி - க.பொ.த. (சா த) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். அத்துடன் இலங்கை தெழில் நுட்பக் கல்லூரியில் குடிசார் தொழில் துறை சார்ந்த தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குக் குறையாத சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. வயது - 18 தொடக்கம் 40 வரை
3. யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிருபிக்கும் மூலச்சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 17-10-92 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-10-1992

மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்

(சி-5217)

---

யாழ் நகரில் ஒரு புதிய புடைவை மாளிகை

## "எழினி"

**14-10-92 புதன் காலை 9 மணிமுதல் ஆரம்பம்**

★ கண்ணைக்கவரும் வர்ணத்தில் அமைந்த சிறந்தரகச் சேலைகள் துணிவகைகள்
★ ஆடவர்களுக்கான சேர்ட்டிங், சூட்டிங்.
★ நவீன டிசையின்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்
★ சிறுவர் குழந்தைகளுக்கான ஆடைகள்

இன்னும் பல

சிறந்தரகம்! குறைந்தவிலை!! நிறைந்தசேவை!!!

உங்கள் தீபாவளிப் பண்டிகையை எழினியுடன் பகிர்ந்து கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்

**பெரியகடை, யாழ்ப்பாணம்.** (சி5220)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1991 / 1992

இப்பல்கலைக்கழகத்தில் 1991 / 1992 ஆம் கல்வி ஆண்டிற்காகன புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு :

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்,
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்
4. போட்டோ பிரதிகள் 08 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

### கட்டணங்கள்

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக்கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும் விஞ்ஞான, விவசாய, மருத்துவபீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம் ; மருத்துவம் ரூபா 20/- விஞ்ஞானம் ரூபா 30/-
4. மாணவர் வழிகாட்டி கட்டணம் : ரூபா 10/-

| பயிற்சி நெறி | பதிவுசெய்யும் திகதி | நேரம் |
|---|---|---|
| கலை | 26-10-92 | காலை 9.00 - 12.00<br>மாலை 1.00 - 04,00 |
| வர்த்தகம் / முகாமைத்துவம் | 27-10-92 | காலை 9.00 - 12.00<br>மாலை 1.00 - 04 00 |
| மருத்துவம் விவசாயம் | 28-10-92 | காலை 9 00 - 12.00<br>மாலை 1 00 - 04,00 |
| விஞ்ஞானம் | 29-10-92 | காலை 9.00 - 12 00<br>மாலை 1 00 - 04-00 |

மேற்கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் **தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.**

1991 I 92 ஆம் கல்வி ஆண்டிற்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மருத்துவபீட மாணவர்களுக்குரிய விரிவுரைகள் 28-10-92 அன்றே ஆரம்பமாகும். அன்று மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க ஆயத்தமாக வரும்படி வேண்டப்படுகிறார்கள்.

- பதிவாளர்

(சி-5218)

---

## பணியாட்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள புடைவைக்கடையொன்றிற்கு புடைவை வாணிபத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பிக்க விரும்புவோர்கள் 18-10-92 க்கு முன் பின்வரும் சான்றிதழ்களுடன் யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி செயலகத்திற்கு காலை 10.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

1, பிறப்புச்சான்றிதழ்
2. கல்விச் சான்றிதழ்
3 வேலை முன் அனுபவச்சான்றிதழ்

(சி-5219)

---

கணிதம் / விஞ்ஞானம்

## ஆசிரியர் தேவை

முல்லை மாவட்டத்தில் சாதாரண (O/L) உயர்தர (A/L) வகுப்பு மாணவர்களுக்கு கணித/விஞ்ஞான பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் தேவை இருப்பிடம், உணவு வசதி, செய்து கொடுக்கப்படும்.

விரும்பிய தகுதியுள்ளோர் 15-10-92க்கு முன் விண்ணப்பிக்கவும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நடுவகப்பணியகம்
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்.

[3340]

---

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 12-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6080

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்
41-5178, 24-5241, 36-5168, 25-61, 25-7420, 28-2511, 42-2995, 41-1092, 40-6979, 26-6775, 41-9759, 40-7584, 26-4393, 25-346, 41-8626, 24-922, 41-7109, 26-3410, 26-6759, 27-0352, 26-8879, 26-495, 28-5862, 24-8558, 26-512, 42-6226

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
26-4691, 28-6546, 28-6853, 24-1040, 26-9797, 26-5560, 28-2385, 26-2272, 24-9558, 24-6475, 41-4718

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.